IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
RLT OP.No.10/2021
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 11.45 PM.

எ.ம.சா.1 சாட்சி முருகன் த.பெ.ஆறுமுகம்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 01.09.2025 in accordance with the provisions of Act XX141.**

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. எனது தகப்பனார் ஆறுமுகம்தான் வழக்கு சொத்தில் கடை நடத்த வாடகைக்கு சென்றார் என்றால் எனது தாத்தாதான் முதலில் வாடகைக்கு சென்றார். எனது தாத்தா எப்போது வாடகைக்கு சென்றார் என்றால் எனக்கு தெரியாது. எனது தந்தை எப்போது இருந்து வாடகைக்கு இருக்கிறார் என்றால் 1960 ல் இருந்து அதே கட்டிடத்தில் வாடகைதாரராக இருந்து வருகிறார்.

2. 1960க்கு முன்பு சுமார் 20 வருடங்களுக்கு முன்பு இருந்தே தாவா கட்டிடம் உள்ளது என்றால் சரிதான். எனது அப்பா வாடகைதாரராக இருக்கும் போது ரூ.75 வாடகையாக கொடுத்து வந்தார் என்றால் ரூ.8 ல் இருந்து ரூ.75 வரை வாடகை கொடுத்தார். தாவா கடை திருப்பரன்குன்றம் கோவிலுக்கு எதிரே உள்ளது என்றால் சுமார் 400 அடி மேற்கே உள்ளது.

3. தாவா கடைக்கு வாடகை குறைவாக உள்ளது என்று மனுதாரர் சரியான வாடகை நிர்ணயம் செய்ய சமூகம் நீதிமன்றத்தில் RCOP.No.10/2007 வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

மேற்படி வழக்கில் தாவா கடைக்கு வாடகை ரூ.1900/- என நீதிமன்றத்தால் நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் சரிதான், நாங்கள் மேற்படி உத்தரவுக்கு எதிராக மேல்முறையீடு செய்தோம்.

4. மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் RCA.No.7/2017 மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி மேல்முறையீட்டில் மாத வாடகை ரூ.1600/- நிர்ணயிக்கப்பட்டது என்றால் எனது மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது. நான் தாவா கடைக்கு நிர்ணயிக்கப்பட்ட வாடகையை ஆட்சேபணை செய்து 2வது மேல்முறையீடு மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5. மேல்முறையீடு மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததை நிரூபணம் செய்யும் விதமாக அது குறித்து ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாமல் தாக்கல் செய்ததாக தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

6. மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை ரூ.1600/- ம், அதற்கு முன்பாக நிலுவையில் இருந்து வாடகை அக்டோபர் 2017 முதல் மார்ச் 2021 வரையிலான 162 மாதங்களுக்கான பாக்கி தொகையையும், நான் இதுவரை மனுதாரர்களுக்கு செலுத்தவில்லை என்றால் நான் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்ததால் கொடுக்கவில்லை.

7. மேல்முறையீட்டு வழக்கு எ.ம.சா.ஆ.3 ஆவணத்தில் பக்கம் 3 ல் பேரா 4 ல் உத்தரவிடப்பட்டதுபோல் நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட

நியாயமான வாடகையோ பாக்கியில்லாமல் எதிர்வரும் 12.09.2024ம் தேதிக்குள் செலுத்தும் பட்சத்திலும் அதன் பின் வாடகையை ஒவ்வொரு மாதமும் தாவறாமல் செலுத்தும் பட்சத்தில் மேற்படி நிரந்தர உறுத்துக்கட்டளை உத்தரவானது ஊர்ஜியத்தில் இருக்கும் என்றால் சரிதான்.

8. மேற்படி உத்தரவுப்படி எந்த தொகையும் மனுதாரருக்கு செலுத்தவில்லை என்றால் நான் மணியாடர் மூலம் செலுத்தினேன், அவர் பெறவில்லை. நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுத்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் எண். 5 வது ஆவணமானது மேற்படி வழக்கில் மனுதாரர் சாட்சியம் கூறிய பிறகு வேண்டுமென்றே பின்னிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

9. நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ. 5 ஆவணமானது RLT.OP.5/2025 ஆனது மாத வாடகை ரூ.75 யை மட்டும் தாக்கல் செய்வதற்காகதான் நான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மாண்பமை சார்பு நீதிமன்றம் RCA.No.7/2017 உத்தரவில் மாத வாடகை ரூ.1600 நிர்ணயம் செய்த பிறகு பழைய தொகையான ரூ.75 யை செலுத்துவதற்காக RLT.OP.5/2025 யை தாக்கல் செய்திருப்பது நீதிமன்றத்தையும், மனுதாரரையும் ஏமாற்றும் நோக்கத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

10. அருகாமையில் உள்ள கட்டிடங்கள் அனைத்தும் புதிதாக கட்டப்பட்ட கட்டிடங்கள் என்றால் அனைத்தும் பழமையான கட்டிடம் ஆகும். மேற்படி கட்டிடமானது சுமார் 50 வருடங்களுக்கு மேல்

பழமையான கட்டிடங்கள் என்பதால் இடியும் தருவாயில் உள்ளது என்றால் சரியல்ல. பொய்யான தகவல்.

11. நீதிமன்றம் உத்தரவிட்டதுபோல் மனுதாரருக்கு உரிய சரியான வாடகை தொகையை முறையாக செலுத்தவில்லை என்றாலும் தாவா கட்டிடம் இடிந்துவிடும் தருவாயில் இருப்பதாலும் தாவா கட்டிடத்தில் இருந்து வெளியேறவேண்டும் என்றும் தாவா கட்டிடத்தை மனுதாரர் இடித்து விட்டு புதிய கட்டிடம் கட்ட இருப்பதால் நான் வெளியேற வேண்டும் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு மணியாடர் மூலம் பணம் அனுப்பியதாக கூறியதுபோல் அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

12. நான் மேல்முறையீடு மாண்புமிகு சார்பு நீதிமன்றம் RCA.No.7/2017 உத்தரவிற்கு எதிராக மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவிலை என்றாலும் சரியல்ல.

(மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

முடிவடையும் நேரம்: 12.15 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.09.01 11:11:30 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.